அக்கினிப் பறவைகள்

அக்கினிப் பறவைகள் ஆவணி இதழ், 2019 புரட்சி - Media, அக்கினிப் பறவைகள் - புதிய தலைமுறை

## மாதாந்த செய்திச் சுருள்

**01.08.** காணாமல் ஆக்கப்பட்டோர் சம்மந்தமாக 900 நாட்களுக்கும் மேலாகப்போராடிவரும் உறவினர்களில் 38 பேர் இறந்தனர்.

**04.08.** காணாமல் ஆக்கப்பட்டோருக்காகக் குரல் கொடுத்துவரும் ஒரு பிரபலத் தமிழ்ச் செயற்பாட்டாளர் மட்டக்களப்பில் குறிவைக்கப்பட்டு, வாகனவிபத்துக்குள்ளாக்கப்பட்டார்.

**11.08.** யாழ்ப்பாணப் படையினரை ஐரோப்பியத்தூதுவர்கள் சந்தித்தனர்.

**12.08.** இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டபாய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டார்

**13.08.** 8 வயதுச்சிறுவனை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிய குற்றத்திற்காக மதவாச்சியில்  ஒரு புத்தபிக்கு கைது.

**18.08.** போர்க்குற்றவாளியாகிய மேஜர் சவேந்திர சில்வாவினை இலங்கை இராணுவப் படைகளின் 23வது தளபதியாக, இலங்கையின் ஜனாதிபதி, மைத்திரிபால சிறீசேன பதவி உயர்த்தினார்.

கிளிநொச்சியின் பளை மருத்துவமனையில் பணிபுரிந்த வைத்தியக்கலாநிதி சிவரூபனைச் சாதாரண உடையில் வந்த TID அதிகாரிகள் கைதுசெய்தனர். அவரைக் கைதுசெய்ததற்கு எவ்வித காரணங்களும் வழங்கப்படாது, அவர் தடுப்பில் வைக்கப்பட்டார்.

**20.08.** இனவழிப்புக்கருவியாகிய PTAயின் கீழ் கைதுசெய்யப்பட்ட கலாநிதி சிவரூபனின் கைதைக்கண்டித்தும், அவசரமாக அம்மருத்துவமனைக்கு இன்னோர் அதிகாரியை நியமிக்குமாறும், பளை மருத்துவமனையின் முன்னால் அவ்வூர் மக்களால் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

அவுஸ்திரேலியாவிற்கான இலங்கையின் உயர் ஆணையராக நியமனம் செய்யப்பட்ட ஜெ. சி.வெலியமுன தனது பொறுப்புக்களை ஏற்றார்.

**22.08.** காணாமல் ஆக்கப்பட்டோர் சம்மந்தமாகப் போராடிவரும் உறவினர்களில் 40 பேர் இறந்தனர்.

**24.08.** காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் யாழ்ப்பாணக் கிளை திறக்கப்பட்டது.

கலாநிதி சிவரூபனின் கைதினைக் கண்டித்து பளை மக்கள் போராடினார்கள்.

கலாநிதி சிவரூபனுடன் தொடர்புள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவினைச் சேர்ந்த மூன்று இளைஞர்களை PTAயின் கீழ் TID அதிகாரிகள் கைது செய்தனர்.

**28.08.** Zion தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல்களை நடத்திய தற்கொலைக்குண்டுதாரியின் புதைக்கப்பட்ட உடலை புதைக்கப்பட்ட இடத்திலிருந்து உடனடியாக அகற்றுமாறு மட்டக்களப்பு மக்கள் போராடினர். இப்பெரும் போராட்டங்களை, இலங்கைக் காவற்துறையினரும் STF அதிகாரிகளும் அடக்கினர்.

**29.08.** உயிர்த்தஞாயிறுத்தாக்குதல்களை எதிர்கொண்டு திறம்படக் கையாண்டதற்காக இலங்கையின் முப்படைகளின் சார்பாகவும், காவற்துறையின் சார்பாகவும் சிறீசேனவிற்கு ஒரு பதக்கத்தினை INTERPOL வழங்கி கௌரவித்தது.

“இந்தியப் பெருங்கடல்: மூலோபாய, வர்த்தக மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்கள்” எனும் தலைப்பில் ஒரு கலந்துரையாடலினை மஹிந்த ராஜபக்ஷ நிலையம் நடாத்தியது.

2010ம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நடைபெற்ற குழப்பங்கள் சம்மந்தமாக நடாத்தப்பட்ட விசாரணையில், கோட்டபாயவின் அச்சுறுத்தல்களை எதிர்த்து நின்ற 2 குருநகர்க் காவற்துறையினரை இலங்கையின் உச்ச நீதிமன்றம் பாராட்டியது.


மஹிந்த மற்றும் கோட்டபாய ராஜபக்ஷவினைக் கொலை செய்வதற்கான திட்டத்தில் தொடர்புபட்டுள்ளதாக கலாநிதி சிவரூபன் ஒப்புக்கொண்டார் என்பது தவறான தகவல் என்று காவற்துறையினர் தெரிவித்தனர்.

இலங்கைக்கு நாடுகடத்துவதற்காக, பிரியா, நடேசலிங்கம் மற்றும் அவர்களது இரு குழந்தைகளையும் அவுஸ்திரேலிய அரசு பலவந்தமாக ஒரு விமானத்தில் ஏற்றியது.

புத்தரின் முகம் பதிக்கப்பட்ட சேலையினை அணிந்ததன் காரணமாக ஒரு தமிழ்ப்பெண் அச்சுறுத்தப்பட்டு, மக்கள் கூட்டத்தினால் காவல்நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டார். திருகோணமலையில் நடைபெற்ற இச்சம்பவத்தின்பொழுது இவரை அவரது ஆடைகளை உடனடியாக மாற்றிக்கொள்ளுமாறு அக்காவல்நிலையத்தில் வற்புறுத்தப்பட்டார்.

30.08. அவுஸ்திரேலிய நீதிபதி பூம்பேர்க், நடேசன் குடும்பத்தின் வெளியேற்றலைத் தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு தீர்ப்பினை வழங்கினார்.

# விடுதலைக்கான உலகளாவிய போராட்டங்களை முன்னகர்த்திச் செல்லும் ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம்




*04.08.1987 அன்று சுதுமலையில் தமிழீழத் தேசியத்தலைவரால் ஓரு வரலாற்று உரை நிகழ்த்தப்பட்டது. 32 வருடங்களுக்குப் பின்னர், தலைவரின் கருத்துத்தொகுப்பின் மீள்பதிப்பு சுவிஸ் நாட்டில் வெளியிடப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமைச் செயலகத்தினால் 1993ம் ஆண்டு வெளியிடப்பட்ட இவ்வாவண நூல், புலத்தில் வாழும் தமிழ்ச்சமூகத்தினைச் சென்றடைந்து, 2009ம் ஆண்டு பல நாடுகளின் கூட்டுச்சதிகளால் நடந்தேறிய தமிழினவழிப்பினைத் தாண்டி கட்டமைக்கப்பட்ட தமிழினவழிப்பின் மத்தியில் ஈழத்தமிழர்களின் அரசியற் செயற்பாடுகளை வழிநடத்துவதற்காகவும் வெளியிடப்பட்டது.*

*1984 முதல் 1993 வரையான காலப்பகுதிக்குள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின்; உரைகள், நேர்காணல்கள், கடிதங்கள், அரசியற் பிரகடனங்கள் போன்றவற்றைத் தொகுத்து வைத்திருக்கும் ஓர் அரிய ஆவணமாகவே இது அமைகிறது. தமிழீழ நடைமுறை அரசின் அரசியற் சாதுரிய வெளிப்பாட்டுடன்  அவர்கள் தமது உள்ளக, வெளியக விவகாரங்களைக் கையாண்ட முறைகளின் சான்றாகவே இந்நூல் அமைகிறது. பல பூகோள அரசியல் சார் அழுத்தங்களை எதிர்கொள்வதனூடாக, ஈழத்தமிழர்கள் எவ்வாறான செயல்திறனோடு வாழ்ந்தார்கள் என்றும் அவர்களுக்கு உணர்த்தி தமிழிறைமையை என்றும் விட்டுக்கொடுக்காது நிலைநாட்டுவதற்கான வழியினை இத்தொகுப்புத் தெளிவாகப் புடம்போட்டுக்காட்டுகிறது.*



*ஒரு நிரந்தர அரசியற் தளத்தினை நிறுவி அதனைப்பாதுகாப்பதற்காக தாம் எடுத்த பல முடிவுகளையும் நடவடிக்கைகளையும் விளக்குவதனூடாக தமிழிறைமையழிப்பினைத் தொடர்ந்து நிலவும் வெற்றிடத்தினை நிரப்பி, புலத்தில் இருக்கும் அரசியற்தளங்களின் எச்சங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தெளிவு, வாசகர்களை நெறிப்படுத்தும் ஒரு விடயமாக அமைகின்றது. புலத்தில் எஞ்சியிருக்கும் அரசியற்தளங்கள் ஓர் கட்டமைக்கப்பட்ட முறையில் இலங்கை இனவழிப்பு அரசாலும், வேறு பல நாடுகளின் துணையோடும் அழிக்கப்பட்டுவருகின்றன. இவை இக்குழுமங்களால்*

*ஈழத்தமிழர்களுக்கு எதிராக ஏவப்படும் ஐந்தாம் கட்ட ஈழப்போர் எனும் நிகழ்ச்சிநிரலில் தொடரும் கட்டமைக்கப்பட்ட தமிழினவழிப்பின் அடிப்படை அம்சமாகும்.*

*எனவே, இவ்வாறான இக்கட்டான சூழல்களிலும் தமிழீழத் தேசியத்தலைவரின் கருத்துக்களிலிருந்து எழும் அரசியற்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழிறைமையினை விட்டுக்கொடுக்காது நிலைநாட்டவேண்டிய வரலாற்றுக்கடமை ஈழத்தமிழர்களின் கைகளிலே உள்ளது. இக்கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு, எஞ்சியிருக்கும் அரசியற்தளங்களைக் கட்டியெழுப்புவதனூடாக ஓர் நிரந்தரமான அரசியற்தளத்தினை தமிழீழத்தில் நிலைநாட்டலாம். தமிழினவழிப்பின் பெயராலும், கிளர்ச்சிமுறியடிப்புத் திட்டங்களின் பெயராலும் தொடரும் ஆவணவழிப்பினை இவ்வாறான முயற்சியில் இந்நூல், அடக்குமுறைக்குள்ளாக்கப்படும் வேறு பல சமூகங்களையும் இறைமைமிக்க விடியலை நோக்கி வழிநடத்திச்செல்லும் ஓர் உறுதியான நிலைப்பாடு எழுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

(c) All rights reserved

# தமிழிறைமை விட்டுக்கொடுக்கப்படமுடியாத ஒன்று என்பதை வலியுறுத்தும் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் வாழ் ஈழத்தமிழ் இளைஞர்கள்

அவுஸ்திரேலிய நாட்டின் மெல்பேர்ன் மாநகரில், அக்கினிப் பறவைகள் அமைப்பினரின் "Structures of Tamil Eelam: A Handbook" எனும் நூல் 17.08.19 அன்று வெளியிடப்பட்டது. செஞ்சோலைப் படுகொலை நினைவு நாளினை ஒட்டி மெல்பேர்ன் வாழ் ஈழத்தமிழ் இளைஞர்களின் முயற்சியால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



13 வருடங்களாகியும் அங்கீகரிக்கப்படாத தமிழினவழிப்பின் முக்கிய நிகழ்வாகிய செஞ்சோலைத் தாக்குதல்களின் பின்புலத்திலும், 2009ம் ஆண்டு நடந்தேறிய தமிழினவழிப்பின் பின்புலத்திலும் பல வல்லாதிக்க சக்திகள் இணைந்து நிற்பதே காரணியாக அமைகின்றது என இவ்விளைஞர்கள் சுட்டிக்காட்டினர். இவை அனைத்தும் தமிழிறைமையின் அடிபணியா வடிவமாகக் கட்டியமைக்கப்பட்ட தமிழீழ நடைமுறை அரசினை அழித்து, தமிழிறைமையினை சிதைப்பதற்கான முயற்சிகளாக அமைவதாகவே எடுத்துக்கூறப்பட்டது.

செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலைகளின் பல ஆவணக்கோர்வைகள் இந்நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டன. அது மட்டுமின்றி, செஞ்சோலை மாணவிகளால் தயாரிக்கப்பட்டு,வெளியிடப்பட்ட "இளங்கதிர்" சஞ்சிகையின் பிரதிகள்,செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் திருவுருவப்படத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். சோசலியக் கவுன்சிலராகிய Sue Bolton உற்பட்ட வேறு பேச்சாளர்களும், அடக்குமுறை செய்யப்பட்ட பல சமூகங்களை வழிநடத்துமுகமாக இவ்வாறான ஆவண முயற்சிகள் முன்னிற்கின்றன என்பதனை எடுத்துக்கூறினார்கள்.

**"*2009ம் ஆண்டில்* அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா, சீனா, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினது துணையுடன் அரங்கேற்றப்பட்ட தமிழினவழிப்பு, இன்றுவரை கட்டமைக்கப்பட்ட முறையில் நிகழ்த்தப்பட்டு வருகிறது. தமிழீழ மக்களாகிய நாம், அவ்விளைநிலத்தில் பிறந்த நந்திக்கடல் கோட்பாட்டினை அடிப்படையாக வைத்து, அனைத்து இடையூறுகளையும் கடந்து, தமிழிறைமையை நிலைநாட்டுவதற்காகத் தொடர்ந்து உறுதியுடன் பயணிப்போம். தமிழர் எனும் எமது அடிபணியா அடையாளத்தை எமது சிந்தனை, செயல் அனைத்திலும் முன்னிறுத்தி, எம் தேசத்தின் விடியல் வரை எமது அடிப்படைக்கொள்கைகளை விட்டுக்கொடுக்காது தெளிவாகச் செல்வோம்."**



எனும் உறுதியான நிலைப்பாட்டுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

## அக்கினிப் பார்வை




இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில், லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவாக சுவிஸ் நாட்டில் இரு நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

**15.09.19 – நினைவு நிகழ்வு**
மதியம் 2:30 மணி முதல்
Hotel Hofmatt
4142, Muchenstein.

**26.09.19 – 30h அடையாள உண்ணாவிரத நிகழ்வு**
மதியம் 2:30 மணி முதல்
Waisenhausplatz
3011, Bern.

மேலதிக விபரங்களுக்கு: *contact@phoenixtng.com* அல்லது *+41 77 422 82 87* ல் தொடர்புகொள்ளவும்.

## இனவழிப்பின் சுவடுகள்

- சிங்கள மாணவர்களே இல்லாத கிளிநொச்சி சைவக் கல்லூரியில் சிங்கள மொழி தினம் ஒழுங்குசெய்யப்பட்டது.
- கல்லாறு மற்றும் கிளிநொச்சியில் சட்டவிரோத மணற் சுரண்டல்களைப் பொருட்படுத்தாத அதிகாரிகள்.
- கன்னியாவில் இராணுவமயமாக்கலினாலும்,புத்தமயமாக்கலாலும், தமிழர் நிலங்களின் ஆட்புல ஒருமைப்பாட்டின் சீர்குலைப்பு.
- ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் விவசாயத்துறை மழுங்கடிக்கப்பட்டதனால், உற்பத்தி பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது.
- முன்பு உயர்பாதுகாப்பு வலயமாகிய பலாலியில் 2000 ஏக்கர்களுக்கும் அதிகமான நிலப்பரப்புகளை அபகரிக்கும் நோக்குடன் விமானநிலையத்தினை மேம்படுத்துவதற்கான வேலைகளை இந்திய அரசின் உறுதுணையுடன் அமுல்ப்படுத்துவதற்காக இலங்கை அரசு முனைகிறது.
- 8000 hectareகளை நிரந்தரமாகச் சுவீகரிக்க எண்ணும் இலங்கையின் வனவளத்துறை.
- புல்மோட்டையில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுள் பலவந்தமாக நுழையும் முயற்சிகளை வழிநடத்திய புத்தபிக்குகள்.
- வரட்சியால் பாதிக்கப்பட்ட கண்டாவளை மற்றூம் கிளிநொச்சிப் பகுதிகளுக்கு நீர் மற்றும் வேறு அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதனூடாக Winning hearts and minds முயற்சிகளை முன்னகர்த்த இராணுவ அதிகாரிகள் தலைப்பட்டனர்.
- செஞ்சோலை படுகொலையை நினைவுகொள்ளுமுகமாக அமைக்கப்படவிருந்த நினைவுச்சின்னங்களை அமைக்கவிடாது, PTA மற்றும் கிளர்ச்சிமுறியடிப்புத்திட்டங்களினூடாக இனவழிப்பு அரசு உட்புகுந்தது.
- தொல்பொருள்த் துறையால் கூனித்தீவு தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படுகிறது.
- இராணுவத் தளபதியின் மேற்பார்வையில் பலாலி மேலும் ஆக்கிரமிக்கப்படுகிறது.
- PTA இனவழிப்புக் கருவியினூடாக ஓர் இராணுவ அரசினைக் கட்டியெழுப்பும் வகையில் Gazette அறிவித்தல் சிறீசேனவால் வெளியிடப்பட்டது.
- அம்பாறை மாவட்டத்தின் கனகர்கிராம மக்கள் 1 வருடத்திற்கும் மேலாக தமது பாரம்பரியப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்படுவதற்காகத் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கையை வனவளத்துறை முற்றிலும் நிராகரித்து வருகிறது.
- மன்னாரில் 5 இராணுவத் தளபதிகளின் மேற்பார்வையிலும், தெற்கு மக்களின் வாணிப அனுசரணையுடனும் சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் மற்றும் மர வியாபாரம் போன்றன அதிகாரிகளால் பொருட்படுத்தப்படாமல் தொடர்கிறது.
- துறைமுக அபிவிருத்தி எனும் பெயரில் பருத்தித்துறையில் மேற்கொள்ளப்படவுள்ள சிங்களமயமாக்களை அம்பலப்படுத்தியுள்ள ஒரு விளம்பரக் காணொளி சிறீசேனாவினால் வெளியீடுசெய்யப்பட்டது.

(c) All rights reserved